# சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட்

## நிகர லாபம் அதிகரிப்பு

முருகப்பா குழுமத்தைச் சேர்ந்த, சோழ மண்டலம் இன்வெஸ்ட்மென்ட் அண்ட் பைனான்ஸ் நிறுவனத்தின் நிகர லாபம், செப்டம்பருடன் முடிந்த, இரண்டாவது காலாண்டில், 37.5 சதவீதம் அதிகரித்து, 167.34 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.

இது, கடந்த நிதியாண்டின் இதே காலாண்டில், 121.73 கோடி ரூபாயாக இருந்தது.

இதே காலத்தில், மொத்த வருவாய், 14.6 சதவீதம் அதிகரித்து, 1,023 கோடி ரூபாயில் இருந்து, 1,172.20 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.